முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்

முன்னிலை- திரு. எஸ்.என். தனஞ்ஜெயன், B.B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2024-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 18ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண். 20/2024

**TNTM080000202024**

1. பார்த்தீபன்
2. ஆராமுது ...வாதிகள்

/எதிர்/

1. ராஜமணி
2. இந்திராணி
3. வட்டாட்சியர், வெம்பாக்கம்
4. கோட்டாட்சியர், செய்யாறு
5. மாவட்டாட்சியர், திருவண்ணாமலை.

...பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 18.07.2024 தேதியன்று விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. ஏ.நஜீரா அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜி. குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இது குறித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

தாவா அட்டவணை பி ஷெட்யூல் சொத்தை 1ம் பிரதிவாதி போலியான முறையில் தயாரித்த கிரைய ஆவணம் எண்.260/1994 என பதிவெண் கொண்ட ஆவணம் செல்லாது என விளம்புகை செய்ய உத்திரவு பிறப்பிக்ககோரியும், தாவா அட்டவணை "சி" ஷெட்யூல் சொத்து வாதிகளுக்கு மட்டுமே உரிமையானது என விளம்புகை செய்து தாவா அட்டவணை சி ஷெட்யூல் சொத்தை 2ம் பிரதிவாதி வாதிகளிடம் திரும்ப சுவாதீனம் ஒப்படைக்க உத்திரவு பிறப்பிக்ககோரியும், இத்தாவாவினால் வாதிகளுக்கு ஏற்பட்ட செலவீனங்களை வாதிகளுக்கு 1, 2 பிரதிவாதிகள் கட்டிக்கொடுக்க உத்திரவு பிறப்பிக்ககோரியும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1ம் வாதி ஆஜர். 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். கட்டளை 6 விதி 17 சி.பி.சின் கீழ் மனு மீள தாக்கல் செய்யப்பட்டு திருப்பப்பட்டது. மேற்படி மனு வேண்டுமென்றே முறையாக இல்லாமலும், விசாரணையை தவிர்க்கவும் மீள தாக்கல் செய்யப்படுவதாக காணப்படுகிறது. விசாரணை தொடங்கப்படவில்லை. வழக்கு செய்யத்தக்க செய்யாமைக்காக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2024-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 18-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் அவையறிய பகரப்பட்டது.

S N DHANANJEYAN

Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.08.07 11:10:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு.